பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஐப்பசி 23 சனிக்கிழமை [09-11-1991] UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 340

# உணவுக்குப் பஞ்சம் ஏற்படும் நெருக்கடி நிலை உருவாகிறது

### படையினர் சூடு!

வறுத்தலைவிளான் மினி முகாமில் இருந்து நேற்று அதிகாலை குடியிருப்புப் பகுதிகளை நோக்கி படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (உ-3)

### தாக்குதல்

யாழ்ப்பாணம், நவ. 9

மண்டக்கனப்பு மாவட்டம் 40 ஆம் கொலனிப் பகுதியில் ரோந்து சென்ற படையினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர் என்று கூறப்படுகிறது. (உ-3)

முச்சந்தி முரளி



அப்ப... மினி சார்க் தான் இனி நடக்கும் போல..!

## சமாளிக்கச் சகலரின் ஒத்துழைப்பு தேவை என்கிறார் அரச அதிபர்

யாழ்ப்பாணம், நவம்பர் 9

குடாநாட்டில் உணவுக்குப் பஞ்சம் ஏற்படும் நெருக்கடியான சூழ்நிலை ஒன்று உருவாகி வருகிறது. அந்த ஆபத்தைத் தவிர்ப்பதற்கு சகல தரப்பினர்களும் ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

—இவ்வாறு யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

★ பருத்தித்துறைக் கடற்பகுதியில் கப்பல்களில் இருந்து உணவுப் பொருள்களை இறக்கும் வேலைகள் எந்நேரமும் தடைப்படலாம்;

★ உணவுக் களஞ்சியங்களிலும் பொருள்களின் கையிருப்பு முடிவடைந்து வருகிறது.

★ தனியாரிடம் உள்ள உணவுப் பொருள்களும் ஒரு வாரத்திற்கு மட்டுமே போதும்;

—இத்தகைய சூழ்நிலையில் உணவுப் பஞ்சம் ஒன்று ஏற்படக்கூடிய நெருக்கடியான சூழ்நிலை உருவாகி வருகிறது— என்று அரசாங்க அதிபர் விவரித்தார்.

யாழ். செயலகத்தில் நேற்றுப் பிற்பகல் நடந்த பத்திரிகையாளர் மாநாட்டிலேயே அரச அதிபர் இந்த விவரங்களைத் தெரிவித்தார்.

குடாநாட்டின் உணவு நிலையை அவர் புள்ளி விவரங்களுடன் எடுத்துரைத்தார்.

திரு. மாணிக்கவாசகர் செய்தியாளர் மாநாட்டில் மேலும் தெரிவித்ததாவது:—

வெளி மாவட்டங்களில் இருந்து இடம்பெயர்ந்து வந்த 8 ஆயிரத்து 200 குடும்பங்களையும் சேர்த்து யாழ்.

(3 ஆம் பக்கம் பார்க்க)

விடுதலைப் புலிகளுக்கான

## ஆயுத விநியோகத்தை யாரும் தடுக்க முடியாது!

### ஜெனிவாவில் வைத்து கிட்டு பேட்டி

ஜெனிவா, நவ. 9

"தமிழ்நாடு அரசு விடுதலைப் புலிகள் மீது கடும் நடவடிக்கை எடுத்தாலும் புலிகளுக்கான ஆயுத விநியோகத்தை யாராலும் தடுக்க முடியாது."

—இப்படிக் கூறுகிறார் விடுதலைப் புலிகளின் முக்கிய தலைவர்களில் ஒருவரான திரு. சதாசிவம் கிருஷ்ணகுமார் (கிட்டு).

அண்மையில் ஜெனிவாவில் செய்தியாளருக்கு தாம் அளித்த பேட்டியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"தமிழ் நாட்டில் எங்கள் அணியின் மீது தமிழக அரசு கடும் நடவடிக்கை எடுத்து வருகிறது என்பது உண்மையே. எங்கள் ஆதரவாளர்கள் மீதும் நடவடிக்கைகள் எடுக்கிறார்கள்.

இருந்த போதிலும், எங்களுக்கு வரும் ஆயுதங்களை— ஆயுத விநியோகத்தை— யாராலும் தடுத்துவிட முடியாது.

ஆயுதங்கள் தொடர்ந்து தங்குதடையின்றி கிடைக்கத் தகுந்த ஏற்பாட்டை எப்படியும் செய்து விடுவோம்.

எங்கள் இயக்கம் ஆயுதங்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## வட-கிழக்கில் புனர்வாழ்வு; ஜெனிவாவில் 2 நாள் மாநாடு

### தொண்டர் நிறுவனங்கள் ஆராய்வு

ஜெனிவா, நவ. 9

ஸ்ரீலங்காவின் வடக்கு—கிழக்குப் பகுதிகளில் புனர்வாழ்வு மற்றும் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பான விடயங்கள் குறித்து பல சர்வதேச தொண்டர் நிறுவனங்கள் கூடி ஆராய்ந்துள்ளன.

இது தொடர்பாக அண்மையில் ஜெனிவாவில் நடத்தப்பட்ட இருநாள் மாநாட்டில் பல்வேறு தொண்டர் நிறுவனங்கள் பங்குபற்றியதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-3)

## கிட்டுவுக்கு சுவிஸில் அரசியல் தஞ்சம்?

ஜெனிவா, நவ. 9

சுவிட்சர்லந்து நாட்டில் தங்கியிருக்கும் விடுதலைப்புலிகள் இயக்கப் பிரமுகரான திரு சதாசிவம் கிருஷ்ணகுமாருக்கு அந்த நாட்டு அரசு அரசியல் தஞ்சம் வழங்கும் என்பதில் சந்தேகம் ஏதுமில்லை.

'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகைக்காக ஜெனிவாவில் திரு. கிட்டுவைச் சந்தித்த அப்பத்திரிகையின் செய்தியாளர் ரீட்டா செபஸ்தியன் தமது கட்டுரை ஒன்றில் இவ்வாறு திட்டவட்டமாக குறிப்பிட்டிருக்கிறார்.

திரு கிட்டு தம்முடன் ஆங்கிலத்தில் சரளமாக உரையாடியதாகக் குறிப்பிட்ட அந்தச் செய்தியாளர் —

"சுவிஸ் அரசாங்கம் உங்களுக்கு ஆயுதப் பாதுகாப்பு வழங்கியிருப்பதாகக் கூறப்படுகிறதே!" — என்று தாம் கிட்டுவிடம் கேட்டதாகக் குறிப்பிட்டார்.

அதற்கு திரு. கிட்டு "இங்கு அச்சுறுத்தல் ஏதும் இல்லை. அப்படியிருக்கையில் எனக்கு எதற்குப் பாதுகாப்பு?" — என்று திருப்பிக் கேட்டாராம். (உ-3)

## திருவடிநிலைப் பகுதியில் நேற்றுக் காலை மோதல்

யாழ்ப்பாணம், நவ. 9

பொன்னாலை — திருவடிநிலை கரையோரப் பகுதிகளை நோக்கி நேற்றுக் காலை 9 மணியளவில் பீரங்கிப்படகுகள் மூலம் முன்னேற முயன்ற கடற்படையினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் தொடுத்தனர்.

இதனையடுத்து படையினர் பின்வாங்கினர் என்றும்—

கடலில் இருந்தவாறு கரைப் பகுதியை நோக்கி பீரங்கித் தாக்குதல் நடத்தினர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை—

நேற்று முன்தினம் நள்ளிரவு 12 மணி முதல் நேற்றுக் காலை வரை காரைநகர் முகாமிலிருந்து பொன்னாலைப் பகுதியை நோக்கி படையினர் விட்டு விட்டுத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். [உ-3 15]

## செஞ்சிலுவைப் பிரதிநிதி கொழும்பு விரைந்தார்

யாழ்ப்பாணம், நவ. 9

காங்கேசன் துறைமுகத்துக்கு கப்பல்களைக் கொண்டு வந்து உணவுப் பொருள்களை இறக்குவது பற்றியும், தீவுப் பகுதியில் சிக்குண்ட மக்களுக்கு உதவுவது குறித்தும் காரைநகர் கடற்படை அதிகாரியுடன் பேச்சுவார்த்தை நடத்திய பின்னர் —

செஞ்சிலுவைச் சங்க சர்வதேச குழுவின் யாழ். பிரதிநிதி கொழும்பு சென்றுள்ளார்;

கொழும்பு அதிகாரிகள் விடுத்த அழைப்பின் பேரிலேயே அவர் அவசரமாகக் கொழும்பு சென்றதாகச் சொல்லப்படுகிறது.

மேற்கண்ட இரு விடயங்களுடன் விடுதலைப் புலிகளிடம் போர்க் கைதிகளாக உள்ள சிங்களப்பொலீஸாரை அவர்களது உறவினர்கள் இங்கு வந்து சந்திப்பதற்கு ஏற்பாடு செய்வது குறித்தும் அவர் முக்கியமாகத் தமது கொழும்புப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடுவார் எனத் தெரிய வந்தது. [அ-3]

## மீனவரைக் காணவில்லை

தாளையடி, நவ. 9

வடமராட்சி கிழக்குக் கடற்பகுதிக்கு நேற்று முன்தினம் அதிகாலை [illegible] மீன்பிடிக்கச் சென்ற ஒருவர் இன்னும் [illegible] எனத் தெரிவிக்கப்படுகிறது;

இவருடன் கூடச் சென்ற ஒருவர், கடற்படைக் கப்பலைக் கண்டதும், நீந்தி தப்பி வந்து விட்டார் என்றும்— அவர் [illegible] சென்ற கட்டுமர [illegible] நிலையில்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## ஒரு நாள் 'சார்க்' மாநாடு விரைவில் கொழும்பில்!

புதுடில்லி, நவ. 9

ஒத்திவைக்கப்பட்ட சார்க் மாநாட்டுக்குப் பதிலாக, இயன்றளவு விரைவில் — ஒரு நாளில் நடந்து முடியக்கூடிய — மாநாடு ஒன்றைக் கொழும்பில் கூட்டுவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

இது சம்பந்தமாக, தற்போது சார்க்கின் தலைவராக இருக்கும் மாலைதீவு ஜனாதிபதி அப்துல் கையூம் உறுப்பு நாடுகளின் தலைவர்களுடன் பேச்சு நடத்துவதற்காக அந்த நாடுகளுக்கு விஜயம் செய்வார்;

ஸ்ரீலங்கா வெளிவிவகார அமைச்சு நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் இந்த விவரம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது;

ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கும், மாலைதீவு ஜனாதிபதி கையூமுக்கும் இடையில் கொழும்பில் இடம்பெற்ற சந்திப்பின் போது, சார்க் மாநாட்டை ஒரு நாளில்

[8 ஆம் பக்கம் பார்க்க]

## 'சார்க்' குழம்பியது குறித்து நாடாளுமன்றில் விவாதம்

### எதிர்க் கட்சிகள் கோரிக்கை

சார்க் மாநாடு குழம்பியதன் மூலம் ஸ்ரீலங்கா அரசின் வெளிநாட்டுக் கொள்கை தோல்வியடைந்துள்ளது. இது குறித்து நாடாளுமன்றில் ஒரு நாள் விவாதம் நடத்த எதிர்க் கட்சிகள் கோரும்.

—இவ்வாறாக பதில் எதிர்க் கட்சித் தலைவர் அனுரா பண்டாரநாயக்கா அறிவித்திருக்கிறார்.

இதற்கிடையில்—

சார்க் மாநாட்டுக்கு இந்தியா உலை வைத்ததாகக் கூறப்படுவதை ஸ்ரீலங்கா எதிர்க்கட்சிகள் மறுத்துள்ளன;

மாநாடு குழம்ப இந்தியா காரணம் என்று சொன்னாலும் கூட, அது ஸ்ரீலங்கா— இந்திய உறவில் ஏற்படும் பாதிப்பை சீராக்க பிரேமா அரசு தவறிவிட்டதையே காட்டுகிறது என்றும் அவை தெரிவித்தன; (உ-3)

## தலைவர்களுக்கு பிரேமா விருந்து; எதிர்க் கட்சிகள் பகிஷ்கரித்தன

கொழும்பு, நவ. 9

ஸ்ரீலங்கா வந்திருக்கும் பாகிஸ்தான், பங்களாதேஷ், மாலே ஆகிய நாடுகளின் தலைவர்களுக்கு ஜனாதிபதி அளித்த விருந்தை ஸ்ரீலங்கா எதிர்க் கட்சிகள் பகிஷ்கரித்தன.

—இது தொடர்பாக பிரதான எதிர்க் கட்சிகள் நேற்று கூட்டாக அறிக்கை ஒன்றை விடுத்தன. (உ-3)

## இரு தலைவர்கள் புறப்பாடு ஷெரீப் இன்று பயணம்

கொழும்பு, நவ. 9

பங்களாதேஷ் பிரதமர் பேகம் காலிதா ஸியா, மாலைதீவு ஜனாதிபதி மாமூன் அப்துல் கையூம் ஆகியோர் கொழும்பு விஜயத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பினார்கள்.

இதற்கு முன்னர் — பாகிஸ்தான், பங்களா தேஷ், மாலைதீவு ஆகிய நாடுகளின் தலைவர்கள் ஜனாதிபதி பிரேமதாஸவை கொழும்பு இசுறுபாயவில் தனித்தனியாகச் சந்தித்து பரஸ்பரம் நன்மை பயக்கக் கூடிய இருதரப்புப் பேச்சுக்களை நடத்தினர்.

அதன் பின்னர் மூன்று தலைவர்களும் ஸ்ரீலங்கா ஜனாதிபதி, பிரதமர் சகிதம் கண்டிக்கு விஜயம் செய்தனர்.

கொழும்பில் தங்கியுள்ள பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் நாளை தாயகம் திரும்புவார். [உ த-3]

## நுளம்புத் திரியை வீட்டில் நீங்களே தயாரிக்கலாம்!

### யாழ் இளைஞனின் முயற்சி வெற்றி

மழை காலம் வந்ததோடு நுளம்புத் தொல்லையும் தொடங்கிவிட்டது. ஆனால் நுளம்புத் திரிகள் கொண்டு வருவதற்குப் படையினர் தடை விதித்திருக்கின்றனர்.

எனினும் மக்கள் மற்றவற்றை பயன்படுத்தத் தவறவில்லை. நுளம்புத் திரி கொளுத்திப் பழக்கப்பட்டவர்களுக்கு உதவும் விதத்தில் இளைஞர் ஒருவர் உள்ளூர் மூலப்பொருள்களைக் கொண்டு நுளம்புத்திரி தயாரித்துள்ளார்.

அந்த நுளம்புத் திரி தொடர்ந்து ஆறு மணித்தியாலங்களுக்கு எரிவதாகவும், நுளம்புகள் அன்று விடுவதாகவும் அதனைப் பரிசோதித்தயாழ் சுகாதார வைத்திய அதிகாரி அத்தாட்சிப்படுத்தி உள்ளார்.

[4 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

கா. குமரகுரு எழுதிய ஓர் ஆய்வு நூல் 'இறந்த பின் எங்கு செல்கிறோம்' எல்லா பிரபல புத்தகசாலைகளிலும் கிடைக்கும். விலை ரூபா 18/-. (18674)

### பசு விற்பனை

பசு ஒன்று விற்பனைக்கு உண்டு. வாங்குவோர் சங்கத்தில் பசுவைப் பார்வையிட்டு 13-11-1991 (புதன்கிழமை) மாலை 4 மணிக்கு முன்னர் கூறுவிலை சமர்ப்பிக்கவும். யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி, கிழக்கு. (சி/0885)

### தேவை

வைத்தியசாலையில் பணியாற்ற பெண்பிள்ளைகள் தேவை. நேரில் தொடர்பு கொள்ளவும். ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில் மாலை 3.00 தொடக்கம் 4-30 வரை. டாக்டர் எம். கருணாகரன், 33 (101), பலாலி வீதி, யாழ்ப்பாணம். (18698)

### மணமகள் தேவை

கனடாவில் தொழில் புரியும் 28 வயது யாழ் இந்து மணமகனுக்கு மணமகள் தேவை. கல்யாணம் இலங்கையில் நடத்தலாம். முழு விவரங்களுடன் தொடர்பு கொள்ளும் போது புகைப்படப் பிரதியையும் அனுப்புதல் விரும்பத்தக்கது. தொடர்பு: இல. 824 C/o உதயன். (4383)

### றோனியோ

தட்டச்சு, றோனியோ வேலைகள் குறைந்த செலவில் செய்து கொடுக்கப்படும். அறிவகம் புத்தகசாலை, கொலிங்டன் சந்திக்கு அருகாமை. (றோனியோ பேப்பர் விற்பனைக்குண்டு). (சி/0182)

### இடமாற்றம்

தீவகத்தில் ஊர்காவற்றுறை, வேலணை, புங்குடுதீவில் சேவையாற்றிய 'பாக்கியம் குழந்தைகள்' வைத்திய சாலை தற்காலிகமாக கல்வியங்காட்டில் இருந்து 1 மைல் தொலைவில் உள்ள இருபாலைச் சந்தி, குமரபுரம் ஆலயத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. நிர்வாகம். (18700)

### காணவில்லை

5-11-1991 இரவு 7 மணியளவில் சிங்கப்பூர் சோடினைச்சரங்கள் (Decration) சிறிய பெட்டியுடன் கோவில் வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பேபி போட்டோ, பலாலி வீதிச் சந்தி, திருநெல்வேலியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (18695)

### வினாத்தாள் [ஆண்டு 4. 5]

புலமைப் பரிசில், பிரபல பாடசாலை அனுமதி மாதிரி வினாத்தாள் ஆண்டு 5, 10-11-91 ஞாயிறும், ஆண்டு 4, 17-11-91 ஞாயிறும் வெளியிடப்படும். பதிவு செய்து பெற்றுக்கொள்ளவும். 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (18438)

### திருமண சேவை

சகல தொழில்களிலும் மணமகன்மார் உள்ளனர். எல்லா மதங்களிலும் திருமணத் தொடர்பு செய்து கொடுக்கப்படும். ஜாதகம், புகைப்படத்துடன் எல்லா நாட்களிலும் தொடர்பு கொள்ளலாம். துர்க்கா திருமண சேவை, வளர்மதி இல்லம், கே. கே. எஸ் வீதி, மல்லாகம். (4378

### அம்பாள் திருமண சேவை

30, 32, 35 வயதுடைய வெளிநாட்டு விசா உள்ள மணமகன்களுக்கு படித்த, அழகிய மணப்பெண்கள் தேவை. சீதனம் முக்கியமல்ல. ஞாயிற்றுக்கிழமைகளில் தொடர்பு கொள்ளவும். விண்ணப்பமுற்பணம் ரூபா 50/- சின்னச்சாமி குருக்கள் சண்முக ஐயர் வீரமாகாளி அம்மன் கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (18439)

**O/L Paper Class**

நடைபெறுகின்றது.

9-11-91 சனி

பி. ப. 3 மணி - கணிதம்
பி. ப. 4-30 மணி - விஞ்ஞானம்

ஸ்ரார் - அரியாலை
(ஸ்ரான்லி கல்லூரி அருகில்)

(18699)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்: 23 — 09 — 1967
விண்ணில்: 01 — 11 — 1989
திதி: 09-11-1991

### திருமதி சாந்தினி இரவீந்திரன்

வானத்து வண்ணத் தாரகை வென்று
நிலத்திடை வீழ்ந்த
அந்த வெற்றிடத்தை நிரப்ப எண்ணி
வானமகன் உன்னை அழைத்தனனோ - நீ
வான் வெளியில் கலந்தனையோ? ஏன் மௌனத்
துயில் கொண்டாய்?
மௌன கீதம் பாடி மகிழ்ந்திருந்த வேளையிலே
எமையெல்லாம் முகாரி பாடவைத்து - நீ மட்டும்
மௌன கீதம் இசைப்பதென்ன......?

பிரிவாற்றாத் துயருறும்,
அன்புக் கணவன்,
பிள்ளைகள்: பிரியங்கா, பிரிசாந்,
பப்பா, அம்மா, சகோதரர்,
உறவினர்கள்

சிதம்பர நிலையம்,
தனைக்கலை தெற்கு,
சரவெட்டி

(18701)

---

# யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம், இலங்கை.

## வழங்குனர்களையும் ஒப்பந்தக்காரர்களையும் பதிவு செய்தல்-1992

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வழங்கல்களையும், சேவைகளையும் வழங்குவதற்கு தம்மைப் பதிவுசெய்து கொள்ளவிரும்பும் பிரபல்யமான வழங்குனர்கள் / உற்பத்தியாளர்கள் / ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 1991 டிசம்பர் 31 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

### வழங்கல்கள்:

01. எழுதுபொருள்கள்
02. புத்தகங்கள், பருவ வெளியீடுகள், ஏனைய வெளியீடுகள்
03. அலுவலக தளபாடம் - மரம்
04. அலுவலக சாதனங்கள் (ஸ்டீல் அலுமாரி, கபினேட்டுகள் முதலியன)
05 அலுவலக இயந்திரங்கள் (தட்டச்சு இயந்திரங்கள், கல்குலேட்டர்கள், பிரதி பண்ணும் இயந்திரங்கள், போட்டோ கொப்பி இயந்திரங்கள் முதலியன)
06 சகலவகை கறார்ட் வயர் பெயின்டுகள், வார்னிஷ்
07. இயந்திர கருவிகளும் உதிரிப்பாகங்களும்
08. மின்சார சாதனமும், உதிரிப்பாகங்களும்
09. வெட்டும் கருவிகள், மட்பாண்டங்கள் உட்பட சமயலறைப் பாத்திரங்கள்
10. ஜவுளிகள், ஜன்னல் திரைச்சீலைகள், சீருடைத் துணிகள் முதலியன
11. ஆய்வுகூட சாதனங்கள், இரசாயனப் பொருள்களும், கண்ணாடிப் பொருள்களும்
12 மரம்
13 கட்டடப் பொருள்கள் (மணல், செங்கற்கள், உலோகம், சுண்ணாம்பு முதலியன
14 தும்புத்தடிகள், விளக்குமாறுகள், கால் துடைப்பங்கள் முதலியன
15. டயர்கள், டியூபுகள், பற்றறிகள்
16 மோட்டார் உதிரிப்பாகங்கள், துணையுறுப்புகளும்
17. ஆயுர்வேத மருந்துகள்
18. மருந்துகளும், மருத்துவ வழங்கல்களும்
19. விளையாட்டு மற்றும் நலன்புரி பொருள்கள்
20 தீயணைப்பு சாதனங்களும் பாதுகாப்பு சாதனங்களும்
21. மழைக்கோட்டுகள், சேற்று சப்பாத்துகள், குடைகள், சப்பாத்துக்கள் முதலியன
22. பைப்புகளும், பைப் இணைப்புகளும்
23. பிளாஸ்டிக் மற்றும் பைபர் கிளாஸ் உற்பத்திகளும்
24. மட்பாண்டப் பொருள்கள், கண்ணாடிப் பொருள்கள், கண்ணாடிகள்
25. தோட்ட வேலைகளுக்கான பசளைகள், இரசாயனங்கள், கருவிகள்
26. எலக்ரோனிக் உள்ளுறுப்புகள்

### சேவைகள்:

01. அச்சிடுதல், புளொக் செய்தல், ரப்பர் ஸ்டாம்புகள் + திகதி ஸ்டாம்புகள்
02. அலுவலக இயந்திரங்கள் மற்றும் சாதனங்கள் (தட்டச்சு இயந்திரங்கள், கல்குலேட்டர்கள் முதலியன) திருத்த வேலைகள்
03. றிபிறிஜேட்டர்கள், எயர் கொண்டிசனர்கள், திருத்த வேலைகளும், பராமரிப்புகளும்
04. ஸ்டீல் தளபாடங்களின் திருத்த வேலைகள்
05 மரத் தளபாடங்களுக்கான திருத்த வேலைகள்
06 கதிரைகள் பின்னல்
07. உடைகள், கதவு, யன்னல், திரைச்சீலைகளைத் தைத்தல்
08. பெயர்ப்பலகைகள் வரைதலும், பிளாஸ்டிக் பெயர்ப் பலகைகளைச் செய்தலும்
09. உடைகளைச் சலவை செய்தல்
10. புத்தகங்களையும் பருவ வெளியீடுகளையும் 'பைண்டிங்' செய்தல்

### எந்திரவியல் சேவைகள்:

01. மோட்டார் வாகனங்கள் திருத்துதல்
02. மின்மோட்டார்கள், மின்பிறப்பிகள், ஜெனரேட்டர்கள் திருத்துதல்
03. குடிசார் எந்திரவியல் வேலைகள் (கட்டடங்கள் நிர்மாணித்தலும், திருத்த வேலைகளும்)
04. மின்சார வயறிங் வேலைகள்
05. நீர் விநியோக வடிகாலமைப்பு வேலைகள்/திருத்த வேலைகள்
06. இரும்புக் கிறில்கள் / கேற்றுக்கள் உருவமைத்தல் / பொருத்துதல்
07. கட்டடங்கள் / கட்டட சேவைகள் அவற்றுடன் தொடர்புடைய இயந்திர சாதனங்கள் என்பவற்றுக்கான ஆலோசனைச் சேவைகள்
08. நிலையாகப் பொருத்தப்பட்ட மரத்தளபாடங்கள் வழங்குதல் / பொருத்துதல்

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'வழங்கல்கள்/சேவைகள் 1992' எனக் குறிப்பிடப்பட்டு பதிவுத் தபால் மூலம் சகல விண்ணப்பங்களும் பின்வருமாறு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

1. வழங்கல்களுக்கும் சேவைகளுக்குமான விண்ணப்பங்கள் நிதியாளர், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என முகவரியிடப்பட வேண்டும்.
2. பொறியியல் சேவைகளுக்குமான விண்ணப்பங்கள் வேலைகள் பொறியியலாளர், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என முகவரியிடப்பட வேண்டும்.

ஒவ்வொரு வழங்கல்/சேவைக்கும் தனியான விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பத்துடன் பதிவுக் கட்டணம் ரூபா 150/- பெறுமதியான ... பெறப்பட்ட காசுக்கட்டளை / தபாற்கட்டளையையும் இணைத்து அனுப்ப வேண்டும்.

விலை மனுக்கள் பதிவு செய்யப்பட்ட வழங்குனர்களிடமிருந்தே கோரப்படும். ஆயினும் வேறிடங்களிலிருந்தும் விலை மனுக்களைக் கோரப் பல்கலைக்கழகத்திற்கு உரிமையுண்டு.

கோரப்படும் பொழுது விலை மனுக்களைச் சமர்ப்பிக்கத் தவறும் அல்லது உரிய நேரத்திற்கு பொருள்களை சேவைகளை வழங்கத் தவறும் அல்லது குறிப்பிடப்படும் மாதிரிகளுடன் ஒத்திராத பொருள்கள்/சேவைகளை வழங்கும் எந்தவொரு வழங்குனரின் பெயரும் முன்னறிவித்தல் இன்றி பதிவுப் புத்தகத்திலிருந்து நீக்கப்படும்.

ஒவ்வொரு விண்ணப்பமும் பின்வரும் தகவல்களைக் கொண்டிருக்க வேண்டும்.

1. விண்ணப்பிக்கும் வழங்கல் அல்லது சேவை
2. பெயரும் விலாசமும்
3. தொலைபேசி இலக்கம்
4. வியாபார பதிவின் இலக்கமும் திகதியும்
5. வியாபாரத்தின் தன்மை
6. வங்கியாளர்களின் பெயர்
7. கிடைக்கக் கூடிய கடன்வசதிகள்

**குறிப்பு:**

எந்திரவியல் சேவை 3க்கு பின்வருவோர் மட்டுமே விண்ணப்பிக்கத் தகுதியுடையோராவர்.

(அ) ICTAD தரப்படுத்தலின் கீழ் கட்டடங்களை நிர்மாணிப்பதற்கு ஏதாவது அரசாங்க திணைக்களம்/ கூட்டுத்தாபனம் / சபைகளில் பதிவு செய்துள்ளவர்கள் (பதிவுப் புத்தகத்தின் போட்டோப் பிரதி/ அதற்குரிய ஆவணத்தின் பிரதி இணைக்கப்பட வேண்டும்.)

(ஆ) இலங்கை கட்டடங்கள் திணைக்களத்துடன் பதிவு செய்துள்ள அல்லது கட்டடத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தகுதிகாண் கடிதம் வைத்திருப்பவர்கள் (கட்டடங்கள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட கடிதம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.)

(இ) ஏனையோர் ICTAD / ID / 02 (இரு பிரதிகள்) ICTAD / ID / 01 ஐயும் ICTAD 123 விஜயராம மாவத்தை, கொழும்பு - 7 என்ற முகவரியில் இருந்து கொள்வனவு செய்து அதற்கேற்ப விண்ணப்பிக்க வேண்டும்.

(ஈ) விண்ணப்பதாரர் கிளிநொச்சி/வவுனியா மாவட்டங்களில் வேலைகளைச் செய்ய ஆர்வமாய் இருந்தால், அது பற்றி விண்ணப்பத்தில் குறிப்பிட வேண்டும் அத்துடன் அம்மாவட்டங்களில் உள்ள தமது கிளை / பிரதான காரியாலய விலாசம், அம்மாவட்டத்துக்குரிய வியாபாரப் பதிவு அத்தாட்சியுடன் சமர்ப்பிக்க வேண்டும்.

உங்கள் தாபனத்தில் நிரந்தரமாக வேலை செய்யும் சகல எந்திரவியலாளர், கட்டடக் கலைஞர் ஆகியோரின் பெயர் அனுபவங்களைத் (7 இற்கு மட்டும்) தருக.

**பதிவாளர்,**
யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்
(சி-0886)

---

## பிறந்த தின வைபவம்

★ இ. நிஜா ★

கைதடிச் சந்தியை வதிப்பிடமாகக் கொண்ட இந்திரராசா-விஜயா தம்பதிகளின் செல்வப் புதல்வி நிஜா தனது 6 ஆவது பிறந்ததினத்தை இன்று (9 - 11 - 1991) சனிக்கிழமை மாலை 3 - 30 மணிக்கு தமது இல்லத்தில் சிறப்பாகக் கொண்டாடுகிறார்.

மாமா-மாமி, இரத்தினம் இந்திரா, அப்பப்பா - பிரபல வர்த்தகர் சபாரத்தினம், கைதடி. வேலம்பிராயைச் சேர்ந்த அம்மப்பா, கணேஸ் அம்மம்மா, சித்தப்பாமார், சித்திமார், மாமா, மாமிமார், மற்றும் கைதடி தெற்கு மின்னொளி சனசமூக நிலைய மாதர் மன்ற மகளிர் அங்கத்தவர்கள், மற்றும் உறவினர்கள் நிஜாவை நேரில் வாழ்த்துகிறார்கள்.

(18692)

## ஓராண்டு நினைவஞ்சலி



| தாயின் மடியில்: | தாயக மீட்பில்: |
|---|---|
| 24 | 09 |
| 08 | 11 |
| 1973 | 1990 |

### லெப்டினன்ட் நவாஸ் (இராசரத்தினம் சுதானந்தன்)

செந்நீர் சிந்தி மண்ணீழ மீட்பில்
முந்தி நின்ற லெப்டினன்ட் நவாஸ்
அந்நியர் அழிப்பில் அணைந்த தீபமே!
சிந்திய கண்ணீரால் தமிழ் ஈழம் சுடருது.

அப்பா, அம்மா, அண்ணன்மார்,
அக்கா, தங்கை.

கைதடி மேற்கு,
கைதடி.

(18539)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## காப்பாற்றுக!

அகதி முகாம்களில் உள்ள குழந்தைகள் போசாக்கின்மையால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குள் அமைந்திருக்கும் பன்னிரெண்டு அகதி முகாம்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இருந்து இந்தத் தகவல் வெளியாகி உள்ளது.

புள்ளி விவரங்களை விவரமாகப் பார்த்தால், பாதிப்பின் உண்மை நிலை தெரியவரும். ஒரு வயதிற்கு உட்பட்ட பிள்ளைகளில் 41 சதவீதமானோரும், ஒன்று முதல் இரண்டு வரையான வயதெல்லைக்குள் உள்ள குழந்தைகளில் 67 சத வீதத்தினரும், இரண்டு முதல் ஐந்து வயதுக்குட்பட்ட சிறுவர்களில் 74 சத வீதமானவர்களும் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர்!

குழந்தைகள், சிறுவர்கள் மட்டுமன்றி தாய்மார்களும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அகதி முகாம்களில் உள்ள தாய்மார்கள். நூறு சத வீதமானோருக்கும் இரத்த நிலை 50 சத வீதத்துக்குக் குறைவாகவே உள்ளது! பாலூட்டும் தாய்மாரில் மிகப் பலருக்கு இரத்த சோகை இருப்பது கண்டறியப்பட்டுள்ளது

மாநகர சபை எல்லைக்குள் அமைந்திருக்கும் அகதி முகாம்களில் சேகரிக்கப்பட்ட இத்தரவுகளை, யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள அகதி முகாம்களின் மாதிரிகளாக எடுத்துக் கொள்ளலாம்.

இந்த நிலை மிகவும் பயங்கரமானது. வருங்காலத் தமிழர் சந்ததியினரான இன்றைய குழந்தைகளின் உடல் வளர்ச்சி குன்ற ஏதுவாகிவிடும். போசாக்கின்மையின் பெறுபேறாக அவர்களின் உடல், நோய் எதிர்ப்புச் சக்தியை இழந்துவிடும். அதன் விளைவு — வருங்காலத் தமிழர்கள் நோயாளிகள் சமூகமாக மாறிவிடுவர். இது தடுக்கப்பட்டாக வேண்டும்.

தமிழர் சமுதாயம் ஏற்கனவே தனது இளம் பரம்பரை ஒன்றை இழந்து வருகிறது. இராணுவத்தினரிடம் சிக்குண்டு இறந்தவர்கள்; பொதுமக்கள் மீதான தாக்குதல்களின் போது இறந்தவர்கள்; உரிமைகளை வென்றெடுக்க வேண்டும் என்ற இலட்சியத்துடன் வீர மரணம் எய்தியவர்கள் என்று பல வழிகளிலும், வாழ்க்கையை அனுபவிக்க வேண்டிய இளைஞர்களும், யுவதிகளும் செத்து மடிகிறார்கள்.

அவர்கள் தங்கள் உயிரை இவ்வாறு தியாகம் செய்வதெல்லாம் வருங்காலச் சந்ததியினரான இன்றைய குழந்தைகளாவது நிம்மதியாகவும், பாதுகாப்பாகவும், சுதந்திரமாகவும் வாழ வேண்டும் என்பதற்காகவே.

வருங்காலச் சந்ததியினரும் நோயாளிகளாகி இளவயதிலேயே மரணமடைய நேரிட்டுவிட்டால்...! நினைத்துப் பார்க்கவே நெஞ்சு கனக்கிறது. ஐயகோ! தமிழர் சமுதாயத்தின் பல சந்ததிகள் இடையில் இல்லாமற் போய் விடுமோ...!!

இதனை சமூகப் பற்றுள்ள, இன முன்னேற்றத்தில் - அதன் வாழ்வில் - அக்கறை உள்ள எந்தத் தமிழ் மகனாலும் பொறுத்துக் கொள்ள முடியாது.

அதாவது. அகதி முகாம்களில் தாய்மார்களும், சிறுவர்களும் போசாக்கின்மை, இரத்த சோகை ஆகியவற்றால் பாதிக்கப்படுவது குறித்து அக்கறை இல்லாமல் இருந்துவிடக்கூடாது இது ஓர் சந்ததி அழிவை உண்டாக்கக் கூடிய பாரதூரமான விடயமாக அணுகப்பட வேண்டும்.

அகதி முகாம்களைப் பராமரித்து வரும் அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் இது விடயத்தில் உடனடியாகச் செயலில் இறங்க வேண்டும். இதனை ஓர் அவசர காரியமாகக் கருதி முன்னுரிமை கொடுத்துச் செயற்பட வேண்டும். தமக்குள்ள சகல வளங்களையும் திரட்டி வருங்காலச் சந்ததியைக் காப்பாற்ற வேண்டும்.

---

**சார்க் ஒத்திவைப்பு**

## பிரேமா அரசின் மீது எதிரணிகள் பாய்ச்சல்!

கொழும்பு, நவ. 9

பிரேமதாஸா அரசின் தவறான ராஜதந்திர அணுகுமுறையே சார்க் உச்சி மாநாடு ஒத்திவைக்கப்பட்டதற்குக் காரணமாகும்.

—ஸ்ரீலங்கா எதிர்க் கட்சிகள் இவ்வாறு குற்றஞ் சுமத்தியிருக்கின்றன.

கொழும்பில் எதிர்க்கட்சிகள் கூட்டாக நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் ஸ்ரீ. லங். சு. கட்சியின் பதில் தலைவரும் பதில் எதிர்க்கட்சித் தலைவருமான அனுரா பண்டாரநாயக்கா இந்தக் குற்றச்சாட்டைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

நடுநிலையான — பிராந்தியத்தில் பரஸ்பர நம்பிக்கையையும் ஒத்துழைப்பையும் வளர்ப்பதற்கான — கண்ணோட்டம் பிரேமதாஸவுக்கு இல்லை.

சீரான — அறிவுசார்ந்த — வெளிநாட்டுக் கொள்கைகளை இந்த அரசு கொண்டிராத காரணத்தால் மாநாடு குழம்பி, ஸ்ரீலங்கா அவமானப்பட நேர்ந்தது.

ராஜீகத் துறையின் மிகவும் மோசமான தவறுகளைக்கொண்டதால் இந்தத் தோல்வி நாட்டுக்கு ஏற்பட்டது.

### சர்வதேச குற்ற விசாரணை

மாநாடு குழம்பி, குளறுபடி ஏற்பட்டமை ஸ்ரீலங்கா ஜனாதிபதி மீதான சர்வதேச குற்ற விசாரணை என்றே கூற வேண்டும்.

அயல் நாடுகளுடன் ஸ்ரீலங்கா அரசு முரண்பாடான ஒரு போக்கையே கடைப்பிடித்து வந்துள்ளது. பக்கத்து நாடுகளுடன் பிரச்சினைகளை மோதித் தீர்க்கவே பிரேமதாஸா அரசு விரும்பியது. இந்தியாவுடனான உறவு சீர்கெட்டதற்கு இதுவே காரணம். இதற்கு அரசு பொறுப்பேற்க வேண்டும் — என்றார்.

இந்திய அமைதிப் படை இலங்கையில் இருப்பதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதாகக் கூறி, மாலேயில் நடைபெற்ற கடைசி சார்க் மாநாட்டில் ஜனாதிபதி பிரேமதாஸா பங்கு பற்றாததையும் —

இந்திய அமைதிப் படைக்கு எதிராகப் போராட விடுதலைப் புலிகளுக்கு ஜனாதிபதி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியப் பத்திரிகைகள் இந்தியா மீது கண்டனம்!

புதுடில்லி, நவ 9

சார்க் மாநாடு ஒத்திவைக்கப்பட்டதற்காக அனேகமான இந்தியப் பத்திரிகைகள். இந்தியா மீது குற்றம் சுமத்தி, இந்தியாவை கண்டித்திருக்கின்றன.

பூட்டான் மன்னர் பங்குபற்றாத விடயத்துக்காக மாநாடு ஒத்திவைக்கப்பட்டிருக்கக் கூடாது என்று 'இந்து' பத்திரிகை தெரிவித்தது.

மன்னருக்குப் பதிலாக அவரின் பிரதிநிதி ஒருவரை ஏற்றுக்கொள்வதன் மூலம் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டிருக்கலாம் என்றும் 'இந்து' குறிப்பிட்டுள்ளது.

மாநாடு ஒத்தி வைக்கப்பட்டதற்கு "இந்தியன் எக்ஸ்பிரஸ்" பத்திரிகை கவலை தெரிவித்திருக்கிறது.

மாநாட்டை நடத்தி வைக்கும் கௌரவம் இலங்கையிடமிருந்து ஓராண்டுக்குள் இரண்டு முறை பறிக்கப்பட்டிருக்கிறது என்றும் அப் பத்திரிகை தெரிவித்தது.

மாநாடு ஒத்திவைக்கப்பட்டமை 'சார்க்' அமைப்புக்கு ஒரு பலத்த அடி என்றும் பல பத்திரிகைகள் விமர்சித்துள்ளன. [உ-த]

## இந்தியாவுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கு மறுப்பு

புதுடில்லி, நவ 9

சார்க் மாநாடு ஒத்திவைக்கப்பட்டதற்கும், இந்தியாவுக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்று இந்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் தெரிவித்துள்ளார்.

பீஹாரில் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர், மாநாட்டில் கலந்து கொள்வதில்லை என்று பூட்டான் மன்னர் முடிவு செய்ததற்கும் இந்தியாவிற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றும் சொன்னார்.

மாநாட்டில் பூட்டான் மன்னர் பங்கு பற்ற வேண்டியது அவசியம் என இந்தியா வற்புறுத்தவில்லை என்றும் இந்தியத் தரப்பில் அறிவிக்கப்பட்டது

இந்தியா எதையும் வலியுறுத்தவில்லை தற்போதைய சார்க் தலைவரான மாலைதீவு ஜனாதிபதியின் ஆலோசனைப்படி இந்திய செயல்பட்டது என்று புதுடில்லியில் இந்திய வெளியுறவுத்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். [உ-த]

## பிரேமாவிடம் பூட்டான் மன்னர் மன்னிப்புக் கோரினார்!

கொழும்பு. நவ 9

சார்க் மாநாட்டில் பங்குபற்றுவதா என்பது குறித்து காலம் தாழ்த்தித் தம் முடிவு செய்ததற்காக பூட்டான் மன்னர் வாங்சுக் ஸ்ரீலங்கா ஜனாதிபதி பிரேமதாஸாவிடம் மன்னிப்புக் கோரியிருக்கிறார் என்று கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

சார்க் மாநாடு சிறப்பாக நடைபெற ஜனாதிபதி பிரேமதாஸா பெரியளவில் ஏற்பாடுகள் [illegible] முடிவு [illegible] என்றும் அவர் தெரிவித்துள்ளார். [உ-த]

---

நாஸிகளின் கூட்டங்கள் அடுத்த வாரம்:

## ஜேர்மனியில் அகதிகள் மீது தாக்குதல் நடக்கும் அபாயம்

பொன், நவ. 9

அடுத்த வார இறுதியளவில் ஜேர்மனியில் தங்கியிருக்கும் அகதிகள் மீது நாஸிகள் தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபடலாம் என அஞ்சப்படுகிறது.

அடுத்த வார இறுதியில் நாஸி ஆதரவாளர்களினதும், இடதுசாரிகளதும் கூட்டங்கள் ஜேர்மனியில் பல இடங்களிலும் நடைபெற இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கூட்டங்கள் நடைபெறும் சமயம், பலாத்கார நடவடிக்கைகள் மற்றும் வன்செயல்கள் ஏற்படக்கூடிய அபாய நிலை இருப்பதாக ஜேர்மன் பொலீஸாரும் அச்சம் தெரிவித்துள்ளனர். [ஓ-த]

## பிரிட்டனின் ஆளும் கட்சி இடைத் தேர்தலில் தோல்வி

### கன்சர்வேட்டிவ் பிடி நழுவுகிறது

பிரிட்டனில் நடந்த மூன்று நாடாளுமன்ற தொகுதிகளுக்கான இடைத் தேர்தல்களிலும் ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சி தோல்வியடைந்தது

இரண்டு தொகுதிகளில் தொழிற்கட்சியும் ஒருதொகுதியில் லிபரல் ஜனநாயகக் கட்சியும் வெற்றியீட்டின.

பொதுத்தேர்தலுக்கு இன்னும் எட்டுமாதங்களே இருக்கையில் இடைத்தேர்தல் முடிவுகள் ஆளும் கட்சிக்கு பலத்த பின்னடைவை ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புதிதாக பொதுத்தேர்தல் ஒன்று நடத்தப்படின், தொழிற் கட்சி அறுதிப் பெரும்பான்மையுடன் ஆட்சியை அமைக்கக்கூடிய நிலையில்—ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சியிலும் பார்க்க— 8 சத வீதம் முன்னணியில் இருப்பதாக கருத்துக் கணிப்புகள் தெரிவித்தன. (உ-எ)

---

## உணவுக்குப்--

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

குடாநாட்டில் உள்ள 2 லட்சத்து 20 ஆயிரம் குடும்பங்களுக்கு உணவு வழங்க வேண்டியுள்ளது.

### அகதி முகாம்களில்

இவர்களில் அகதி முகாம்களில் தங்கியுள்ள 45 ஆயிரம் குடும்பங்களுக்கும் வாராந்தம் உணவு வழங்க, ஆயிரத்து 205 மெற்றிக் தொன் அரிசியும், 830 மெற்றிக் தொன் மாவும் 86 மெற்றிக் தொன் சீனியும் தேவைப்படுகின்றன.

முகாம்களுக்கு வெளியே வாழ்பவர்களுக்கு வாராந்தம் உணவு வழங்க நாலாயிரத்து 775 மெற்றிக் தொன் அரிசியும், மூவாயிரத்து 748 மெற்றிக் தொன் மாவும். 353 மெற்றிக் தொன் சீனியும் தேவையாகவுள்ளன.

கடந்த ஆறு மாத காலமாக கப்பல்கள் மூலம் கொண்டுவரப்பட்ட உணவுப் பொருள்களை நோக்குமிடத்து சராசரியாக மாதாந்தம் மூன்று கப்பல்களே வந்துள்ளன. அவற்றின் மூலம், 3 ஆயிரத்து 600 மெற்றிக் தொன் அரிசியும், 3 ஆயிரத்து 600 தொன் மெற்றிக் தொன் மாவும், 750 மெற்றிக் தொன் சீனியும் கொண்டு வரப்பட்டுள்ளமை கணக்கிடப்பட்டுள்ளது.

### 30 வீதமே வருகிறது

கப்பலில் கொண்டுவரப்படும் பொருள்கள் மூலம் மக்களின் தேவையில் சுமார் 30 தொடக்கம் 40 சத வீதத்தை மட்டுமே பூர்த்தி செய்ய முடிகிறது.

மிகுதியான தேவைக்குத் தரை மார்க்கமாக வரும் பொருள்களையும், உள்ளூர் உற்பத்திகளையுமே நம்பியிருக்க வேண்டி இருந்தது. மக்களின் நுகர்ச்சியும் குறைந்திருந்தது.

இந்தச் சந்தர்ப்பத்தில் 17-10-91ல் யாழ் மாவட்டத்துக்கான தரைவழி விநியோகப் பாதை தடைப்பட்டமை, கப்பலில் பொருள்களை இறக்குவதற்கு ஏற்பட்டுள்ள இடையூறு. காலநிலையால் பாதிப்பு, மேலதிகமான இறங்குதுறையை ஒழுங்கு படுத்தாமை ஆகிய காரணிகளால் உள்ளூரில் அத்தியாவசியப் பொருள்களின் தட்டுப்பாட்டை மேலும் அதிகரித்தது.

அதனால் இப் பொருள்களுக்கான அசாதாரண விலை ஏற்றம், பதுக்கல், கள்ளச் சந்தை. சாதாரண நுகர்வோர் பொருள்களை வாங்க முடியாமை ஆகிய பாதகமான நிலையை உருவாக்கியது.

### பங்கீட்டுத் திட்டம்

இதனைக் கருத்தில் கொண்டு உணவுப் பொருள்கள் எல்லோருக்கும் சீராகக் கிடைக்க வகைசெய்வதற்கான பங்கீட்டுத் திட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது.

இவ்வாறு அரச அதிபர் கூறினார்.

இச் செய்தியாளர் மாநாட்டில் யாழ் செயலகத்தைச் சேர்ந்த திட்டப் பணிப்பாளர் திரு. எஸ். பத்மநாதன், [illegible] திரு. செல்வின் ஆகியோரும் சமூகமளித்திருந்தனர். [அ-3]

## பதிவுத் தபால்கள் குறைவு

'விஸ்வி' கப்பலில் எடுத்து வரப்பட்ட தபால் பொதிகளில் பதிவுத் தபால்கள் குறைவாகவே இருந்தன. இதனால் யாழ். தபால் நிலையத்தில் நேற்றுக் கூடிய மக்கள், ஏமாற்றத்துடன் திரும்பினர்.

வெளிநாடுகளில் இருந்து காசோலைகள் மற்றும் டிராப்டுகள் பதிவுத் தபால் மூலமே அனுப்பப்படுவது வழக்கம்.

இம்முறை வந்த தபால் பொதிகளில் ஆக 73 பதிவுத் தபால்களே வந்தன.

## ரோந்து தீவிரம்

வடமராட்சி கிழக்குக் கடற் பிரதேசத்தில் படையினரின் ரோந்து நடவடிக்கை அதிகரித்துக் காணப்படுகிறது.

படையினர் படகுகளில் அடிக்கடி ரோந்து சுற்றி வருவதால் மீனவர்கள் தொழில் ரீதியாக பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடற்றொழிலாளர்கள் படையினரின் அச்சுறுத்தல்களுக்கு இலக்காகி வருகின்றனர். [ஓ 144]

---

## ஒரு நாள்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

நடத்தி முடிப்பது குறித்து இணக்கம் காணப்பட்டது என்றும்—

மாநாடு நடைபெறும் திகதி விரைவில் அறிவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

---

## ஆயுத..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

களை நம்பி இருக்கவில்லை: ஆயுதங்கள் தற்பாதுகாப்புக்குத் தான். ஈழத் தமிழ் மக்களின் மன உறுதிதான் எங்களது போராட்டத்தின் முதுகெலும்பு. எனவேதான் எங்கள் போராட்டத்துக்கு ஆதரவு தருமாறு தமிழர் அனைவரையும் கேட்டுக் கொள்கிறோம்.

இனப் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண நம் தயாராக இருக்கிறோம்." — என்றார்

---

## மீனவரைக்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கரையொதுங்கியுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

வெற்றிலைக்கேணி இராணுவ நடவடிக்கையை அடுத்து இடம்பெயர்ந்து வந்து, மாமுனையில் தங்கியிருந்த முருகுப்பிள்ளை சந்திரகுமார் (சந்திரன்) என்ற இளம் குடும்பஸ்தரே காணமற்போனவர் ஆவார். [ஓ-144]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடுமுறை வழங்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 9

சனிக்கிழமை பிற்பகல் 2 00 மணியுடனும், ஞாயிற்றுக்கிழமை முழு நாளும் கடைகளைப் பூட்டி ஊழியர்களுக்கு விடுமுறை வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

யாழ். வர்த்தகர் சங்கமும், வட பிராந்திய வர்த்தக ஊழியர் சங்கமும் இணைந்து வர்த்தக நிலைய உரிமையாளர்களிடம் இந்த வேண்டுகோளை விடுத்திருக்கின்றன. [உ]

## உள்ளூர் உற்பத்திப் பொருள்களை கூட்டுறவுசங்கங்கள் கொள்வனவு செய்யும்

யாழ்ப்பாணம், நவ. 9

உள்ளூர் உற்பத்திப் பொருள்களை நியாயமான விலையில் கொள்வனவு செய்து, உற்பத்தியை ஊக்குவிக்க பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் தயாராக உள்ளன.

யாழ் மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள் நேற்று முன்தினம் ஒன்று கூடி, ஆராய்ந்த பின்னர் இவ்வாறு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

உள்ளூர் உற்பத்தியாளர்கள் தமது உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்ய ப. நோ. கூ. சங்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

ப. நோ. கூ. சங்கங்கள் போதிய விளம்பரங்கள் செய்து உள்ளூர் உற்பத்திப் பொருள்களை கொள்வனவு செய்யும் என்றும் அறிவிக்கப்பட்டது. [உ]

## அத்தியாவசியப் பொருள்கள் தனியார் கடைகள் மூலம்!

யாழ்ப்பாணம், நவ. 9

அத்தியாவசியப் பொருள்களின் விநியோகத்தை தனியார் கடைகள் மூலம் பரீட்சார்த்தமாக மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ். அரச அதிபர் இத்தகவலை வெளியிட்டார்.

முதற்கட்டமாக இத்திட்டம் யாழ். உ. அ. அ. பிரிவில் 25 கடைகளிலும், நல்லூர் உ. அ. அ. பிரிவில் 15 கடைகளிலும், சாவகச்சேரி உ. அ. அ. பிரிவில் 15 கடைகளிலும் மேற்கொள்ளப்படும்.

இத்தகைய கடைகளை பொறுப்பேற்று செய்யும்படி பிரதேச பாவனையாளர் பாதுகாப்புக் குழுக்கள் கேட்கப்பட்டுள்ளன என்றும் அவர் சொன்னார்.

பரீட்சார்த்த முயற்சி வெற்றியளித்தால் இத்திட்டம் விஸ்தரிக்கப்படும் என்றும் அவர் கூறினார். [உ-3-15]

## பிரேமா அரசின்----

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆயுதம் வழங்கியதையும் அவர் கண்டித்தார்.

இந்தியாவுடனான உறவை மீள் பரிசீலனை செய்யும்படியும் அவர் கேட்டுக்கொண்டார்.

இந்தப் பத்திரிகையாளர் மாநாட்டில் ஐக்கிய சோஷலிஸ அணி, ஈ. பி. ஆர். எல். எவ்., மக்கள் ஐக்கிய முன்னணி, நவ சமசமாஜக்கட்சி ஆகியவற்றின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். [உ-த]

## நுளம்புத் திரியை..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

யாழ். கச்சேரி கிழக்கு ஒழுங்கையைச் சேர்ந்த யோக மனோகரன் என்ற இளைஞர் தாம் பின்வரும் பொருள்களைப் பாவித்தே நுளம்புத் திரியைத் தயாரித்ததாகத் தெரிவித்தார்;-

இடித்து அரித்தெடுத்த உமி மா, சிரட்டைக்கரி மா, நீரில் ஊற வைத்து இடித்தெடுத்த பழைய பேப்பர் கூழ், இடித்த வேப்பிலை, இடித்த வேப்பம் கொட்டை ஆகியவற்றை 2: 1: 2: 4: 8 விகிதத்தில் கலந்து சிறிது நீரும் சேர்த்து இடித்தால் வரும் பசை புருக் கலவையை அச்சிலிட்டு எடுத்தால் இறக்குமதி செய்வது போன்ற நுளம்புத்திரி தயாராகிவிடுகிறது.

உமி மா, இடித்த வேப்பிலை, இடித்த வேப்பங்கொட்டை ஆகியவற்றின் புகை கலந்து வாயு பரவுகிறது.

காகிதக் கூழ். திரியில் உள்ள மூலப் பொருள்களை ஒன்று சேர்க்கும் பசையாக உதவுகிறது. வேப்பிலை, வேப்பங்கொட்டை ஆகியவற்றிலுள்ள பசைத் தன்மையும் இதற்கு உதவுகிறது.

வேறு நுளம்பு கலைக்க வல்ல மூலப் பொருள்களை இத்திரியில் ஊட்டுவதன் மூலமும் நுளம்புத் திரி தயாரிக்கலாம் — என்று அவர் தெரிவித்தார். (அ-உ)

## மரண அறிவித்தல்

### பொன்னர் நல்லதம்பி

யாழ். பிறவுண் வீதி, 5 ஆம் ஒழுங்கையைச் சேர்ந்த பிரபல கட்டட ஒப்பந்தகாரர் பொன்னர் நல்லதம்பி (பஞ்சு-பொன்னர் வளவு) 8-11-1991 வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு காலமாகினார்.

அன்னாரது ஈமக்கிரியை 9-11-91 சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் கோம்பயன் மயானத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள், அன்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

மனைவி, பிள்ளைகள்

இல. 66/2 5 ஆம் ஒழுங்கை

பிறவுண் வீதி.

யாழ்ப்பாணம். (18442)

## அம்பாறையில் தீவிர தேடுதல்

கொழும்பு, நவ. 9

அம்பாறை மாவட்டத்தில் படையினரின் தேடுதல்கள் பல முனைகளிலும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பி. பி. ஸி. நேற்றிரவு தெரிவித்தது.

காட்டுப் பகுதியில் வான் தாக்குதல்கள் முனைப்பாக மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## மாத்தளையில் பொலீஸார் மீது சுட்ட தமிழ் இளைஞன்!

கொழும்பு, நவ. 9

மாத்தளையில் பொலீஸார் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகக் கூறப்படும் தமிழ் இளைஞர் ஒருவர் அண்மையில் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மாத்தளை அவனவத்தை காட்டில் உள்ள குகை ஒன்றில் பதுங்கியிருந்த கொள்ளைக் கோஷ்டி ஒன்றை பிடிக்க முயன்ற பொலீஸார் மீது அந்த இளைஞன் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

மாத்தளையைச் சேர்ந்த இராமசாமி குமாரசாமி என்ற அந்த இளைஞனிடம் இருந்து வாளும், ரவைகளும் கைப்பற்றப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## விஷம் கலந்த மது 159 பேர் மரணம்

புதுடில்லி, நவ. 9

இந்தியாவில் விஷம் கலந்த — மதுசாரத்துடன் கூடிய ஆயுள் வேத மருந்தை — அருந்தியதால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 159 ஆக உயர்ந்தது. மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ள சுமார் 150 பேரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-த)

## ரயில் சில்லில் சிக்குண்ட பெண்

கொழும்பு, நவ. 9

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற பெண் ஒருவர், வவுனியா ரயில் நிலையத்தில் ஏறி 'சீற்' பிடிக்க முயன்ற போது ரயில் சில்லுக்குள் சிக்கிக் காயம் அடைந்தார்.

அவரின் இரண்டு கால்களும் சில்லுக்குள் சிக்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவத்தில் காயமுற்ற தெல்லிப்பளையைச் சேர்ந்த சின்னத்தம்பி இரத்தினம் [53 வயது] என்ற இந்தப் பெண் அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-8)

## விமானம் நொறுங்கியது

மாஸ்கோ, நவ. 9

முப்பது பயணிகள் மற்றும் நான்கு விமானிகளுடன் காணாமற் போனதாக அறிவிக்கப்பட்ட சோவியத் உள்ளூர் பயணிகள் விமானம் காக்கஸ் மலைகளில் விழுந்து நொறுங்கி விட்டதாக அறிவிக்கப்படுகிறது. விமானத்தில் இருந்த அனைவரும் உயிரிழந்து விட்டனர். [உ-த]

## 47 தொன் தங்கம் அடகு மீட்பு

புதுடில்லி, நவ. 9

பிரிட்டிஷ் வங்கியிலும் ஜப்பானிய வங்கியிலும் அடகு வைத்த 47 தொன் தங்கத்தை உரிய பணம் செலுத்தி மீட்டு விட்டதாக இந்தியா அறிவித்திருக்கிறது.

இந்தியாவின் நிதித்துறைக்கான இணை அமைச்சர் ராமேஷ்வர் தக்காரே இதனை நேற்று அறிவித்தார்.

கடனாகப் பெறப்பட்ட 40 கோடி டாலர் செலுத்தப்பட்டுவிட்டதாகவும் அவர் தெரிவித்தார். (உ-த)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டால் யாழ்ப்பாணம், [illegible] 292/2 இலக்கத்தில் உள்ள [illegible] 9-11-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## யாழ். மாவட்ட வர்த்தகர்கள்

## கையிருப்பு விவரம் வழங்கும் காலக்கெடு இன்று முடிவு

யாழ். மாவட்டத்திலுள்ள தனியார் வர்த்தகர்கள் தம்மிடம் உள்ள அத்தியாவசியப் பொருள்கள் பற்றிய விவரத்தை வெளியிடுவதற்கு இன்று மாலை ஐந்து மணி வரை இறுதி காலஅவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் இத்தகவலைத் தெரிவித்தார்.

தனியார் வர்த்தக நிறுவனங்களுடன் தாம் நடத்திய பேச்சுக்களின் போது, செயலகம் மேற்கொண்டுள்ள உணவுப் பங்கீட்டுத் திட்டத்துக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கப்படும் என்று அந்த நிறுவனங்களின் சார்பில் உறுதியளிக்கப்பட்டது என அரச அதிபர் தெரிவித்தார்.

பங்கீட்டுத் திட்டத்தைச் செயற்படுத்த வசதியாக வர்த்தகர்கள் தமது கையிருப்பில் உள்ள பால்மா, உழுந்து, பயறு, கௌபி போன்றவற்றை ப. நோ. கூ. சங்கங்களுக்கு விற்கச் சம்மதித்துள்ளனர் என்றும் அரச அதிபர் தெரிவித்தார். [உ-3]

## ஏழைக் குடும்பங்களுக்கு ஒரு வார உணவு இலவசம்!

### ப. நோ. கூ. ச. வழங்க முடிவு

யாழ்ப்பாணம், நவ. 9

உழைக்கும் சக்தியை இழந்து, ஏழ்மை நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள குடும்பங்களுக்கு உதவுவதற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் முடிவு செய்துள்ளன.

அத்தகைய குடும்பங்களுக்கு, தமது செலவில் ஒரு வாரத்துக்குரிய இப்போதைய பங்கீட்டு உணவுப் பொருள்களை இலவசமாக வழங்க அவை தீர்மானித்துள்ளன.

"இ" அட்டை வைத்திருக்காத உழைக்கும் சக்தி இழந்தவர்கள், இம்மாதம் 12 ஆம் திகதிக்கு முன்னர் தங்கள் பகுதியில் உள்ள ப. நோ. கூ. சங்கங்கள், தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுறவுச் சங்க சமாசங்களுடன் தொடர்பு கொண்டு இலவச உணவுப் பொருள்களையும் பெறமுடியும் என அறிவிக்கப்படுகிறது. [அ]

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### வெற்றிவேலு சரவணபவன்

(பொறியியலாளர், மிற்சுஜீ நிறுவனம், ஜப்பான்)

தோற்றம்: 26 - 09 - 1949

மறைவு: 05 - 11 - 1990

எமதன்புத் தெய்வமே!
நெஞ்சிருக்கும் வரை கோடி நினைவிருக்கும்!
வாழ்விலே நினைவிருக்கும்வரை
நிலைத்திருப்பாய் நெஞ்சிலே!


தங்கள் பிரிவால் துயருறும்:

மனைவி, மகன்,
தாய், சகோதரர்கள்.

மாகியப்பிட்டி,
சண்டிலிப்பாய். (4385)

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| ஆண்டவன் படைப்பு: | அநியாய அழிப்பு: |
|---|---|
| 31 | 9 |
| — | — |
| 1 | 11 |
| — | — |
| 1953 | 1988 |



### சோமசுந்தரம் ஜெயக்குமார்

(வருமான மேற்பார்வையாளர் பிரதேச சபை, உடுவில் உப அலுவலகம்)

ஆண்டுகள் மூன்று சென்றாலும்
ஆறவில்லை எம் நெஞ்சங்கள்
இன்று வரை நினைக்கின்றோம்
இனியும் உனை மறப்போமா?

பெற்றோர், உறவினர்கள்.

அளவெட்டி தெற்கு. (18696)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org